



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு,சென்னை தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி தலைமையில் நடைபெற்ற மாபெரும் இறகுப்பந்து போட்டியின் இறுதி ஆட்டத்தை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைத்து போட்டியில் வென்ற வீரர்களுக்கு முதல் பரிசு தலா ரூ.25,000 , இரண்டாம் பரிசு ரூ.20,000,மூன்றாம் பரிசு ரூ.15,000 ரொக்க தொகை மற்றும் கோப்பைகள் வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்வில் மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர் வே.கௌதமன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் அ.அரிகிருஷ்ணன் மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் கழக த.ரமேஷ் த.ஜெகதீசன், வட்ட செயலாளர்கள் கே.என்.தாமோதரன் , பொ.த.மதிவாணன் , த.பார்த்திபன், க.பாரதிதாசன் விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட அனைத்து கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### நகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள

# ஊராட்சிகளுக்கு கூட்டுக் குடிநீர் திட்டம் அமைக்கப்படுமா?

## பேரவையில் – அ.நல்லதம்பி கேள்வி!

சென்னை, டிச. 10-

நகராட்சிகளுடன் புதியதாக இணைக்கப்பட்ட ஊராட்சிகளில் கூட்டுக் குடிநீர் திட்டம் அமைக்கப்படுமா? என்று பேரவையில் திருப்பத்தூர் அ.நல்லதம்பி கேள்வி எழுப்பினார்.

அது வருமாறு:-

**அ.நல்லதம்பி:** முதலமைச்சர் அவர்களையும், துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். முதலமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக, நகராட்சியிலுள்ள 33 வார்டுகளுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் குடிநீர் சிறப்பாக விநியோகிக்கப் பட்டு வருகிறது. நகராட்சிப் பகுதியுடன், ஊராட்சிகளாக இருந்து புதியதாக இணைக்கப்பட் டுள்ள பகுதிகளுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் pipelineஐ அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவாரா?



**அமைச்சர் கே.என். நேரு:** ஒவ்வொரு நகராட்சியிலும், விரிவுபடுத்தப்பட்ட பகுதி களிலே கால்வாய் கட்ட வேண்டும், மழைநீர் வடிகால் கட்ட வேண்டும், புதிய நீர்த் தேக்கத் தொட்டி கட்டப்பட வேண்டும், குடிநீர் வழங்க வேண்டுமென்று அனைத்து இடங்களிலிருந்தும் கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. எது அத்தியாவசியம் என்பதைக் கருதி, உறுப்பினர் அவர்கள் சொல்வதை ஏற்று, இந்த ஆண்டு அதற்காக நிதி ஒதுக்கி செலவு செய்ய முடியுமா என்பதை முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி செய்யப்படும்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

### பெரம்பூர் தொகுதி மண்டலம் – 4-இல் கந்தாஸ் நகரில்

# 110 கி.வோ. துணை மின் நிலையம் விரைந்து அமைத்திட வேண்டும்!

## பேரவையில் – பெரம்பூர் ஆர்.டி.சேகர் கோரிக்கை!

சென்னை, டிச.10-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது பெரம்பூர் தொகுதி உறுப்பினர் ஆர்.டி.சேகர் பெரம்பூர் தொகுதி கந்தாஸ் நகரில் 110 கி.வோ துணை மின் நிலையம் அமைக்கும் பணியை விரைந்து நிறைவேற்றிட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**ஆர்.டி.சேகர்:** முதலமைச்சர் அவர்களையும், துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, பெரம்பூர் தொகுதி, மண்டலம் 4ல் கந்தாஸ் நகரில் 110 kv துணை மின் நிலையம் அமைக்கும் பணியை விரைந்து நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா?



**அமைச்சர் வி.செந்தில் பாலாஜி:** பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியில் எடுத்துக்கொள்ளப்பட்ட துணை மின் நிலையங்கள் தொடர்பான பணிகள், தற்போது ஒப்பந்தப்புள்ளி கோரக்கூடிய நிலையில் இருக்கின்றன. விரைவாக அந்தப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு மேற்கொள்ளப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### எழும்பூர் தொகுதி புல்லாபுரம்- சாஸ்திரி நகர் – போகிப்பாளையம் பகுதிகளில்

# புதைவட மின் கேபிள்கள் அமைத்திடுக!

## பேரவையில் எழும்பூர் இ.பரந்தாமன் கேள்வி!

சென்னை, டிச.10

எழும்பூர் தொகுதி 77வது வார்டு, புல்லாபுரம், சாஸ்திரி நகர், போகிப்பாளையம் பகுதியில் புதைவட மின் கேபிள்களை அமைத்திட வேண்டும் என்று எழும்பூர் தொகுதி உறுப்பினர் இ.பரந்தாமன் கேள்வி நேரத்தின் போது வலியுறுத்தினார்.



இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**இ. பரந்தாமன்:** எழும்பூர் சட்டப்பேரவைத் தொகுதியில் புல்லாபுரம், சாஸ்திரி நகர் மற்றும் வார்டு எண் 77ல் இருக்கக்கூடிய போகிப்பாளையம் ஆகிய பகுதிகளில் போதிய புதைவட மின் கம்பிகள் கேபிள் இல்லாத காரணத்தால் பில்லரில் இருந்து ஒயரை ஒவ்வொரு வீட்டிற்கும் connection கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சென்னை மாநகரத்தில் இதுபோன்று பில்லரில் இருந்து ஒயர் நேரடியாகப் போவது என்பது ஆபத்தை விளைவிக்கக்கூடியதாக இருக்கிறது. எனவே, நான் குறிப்பிட்டிருக்கக்கூடிய புல்லாபுரம், சாஸ்திரி நகர் மற்றும் போகிப்பாளையம் பகுதிகளில் இருக்கக்கூடிய பில்லரில் இருந்து வீடுகளுக்குப்போகிற ஒயர்களுக்குப் பதிலாக கேபிள் பதிய வைத்துத் தருமாறு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் செந்தில் பாலாஜி:** இன்று மாலையே உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய பகுதிகளுக்கு துறையினுடைய அலுவலர்களை அனுப்பி அந்தப் பணிகள் மாற்றி அமைக்கப்படும் என்பதை பேரவை தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### லயோலா கே.மதன் தலைமை! ஐட்ரீம்ஸ் ஆர்.மூர்த்தி – ஜே.ஜே.எபினேசர் முன்னிலை!

# சென்னை வடக்கு மாவட்ட இளைஞரணி அணி சார்பில் பொதுக்கூட்டம்! நலஉதவிகள்!

## சி.வி.எம்.பி.எழிலரசன் சிறப்புரை! ஆர்.டி.சேகர் – கலாநிதி வீராசாமி – எஸ்.ஜோயல் – ச.பரத் பங்கேற்பு!

சென்னை டிச.10

சென்னை வடக்கு மாவட்ட திமுக இளைஞரணி சார்பில் கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு எளியோர் எழுச்சி நாள் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (10.12.2024 செவ்வாய்க்கிழமை) மாலை 6.30 மணியளவில் பெரியபாளையத்தம்மன் கோயில், பனைமரத்தொட்டி, செ13ல் நடைபெறுகிறது.

சென்னை வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் லயோலா கே.மதன் தலைமை வகிக்கிறார்.

ஐடிட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, இரா. செந்தில்குமார், வ.பெ. சுரேஷ், என்.கிருஷ்ணன், கட்பீஸ்.ப.சோமசுந்தரமூர்த்தி, இர.பொன்இளவரசன், வை.கௌதமன், இரா. ரவிக்குமார், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

டி.கருணாகரன், எம். டில்லிபாபு, கே.ரங்கராஜ், ஆர்.மோகன், எஸ்.சுரேஷ், ஆர்.பரந்தாமன், ஜி. லோகேஷ், வி.பரமேஸ்வரன், சி.சாந்தாதேவி, வி. லோகேஷ், எஸ்.ரவி, ஏ. அன்புச்செழியன், டி.தர்மலிங்கம், கே. கிரிதரன், ஜி.சித்தார்த்தன், யு.மதிவாணன், எம்.முத்துக்குமார், ஜி.பூலோகதேவி, ஆர்.திலகவதி, எம். மகாலட்சுமி, பி.விஸ்வ நாதன், ஜெ,அசோக், பி. ஜெயகாந்தன், ஐ.விஜய குமார், எம்.ரவி, என். ராஜேஷ், எம்.தினேஷ்குமார், என்.சுனில்குமார், ஜெ.கார்த்திக், இ.சுந்தர், டி.சரவணன், எஸ். ராஜேஷ், ஜெ.பரத், கவி. பாரதிராஜா, என்.ஜித்தேஸ்வரன், எம்.சிவக்குமார், பி.பொன்னரசன், கே.ஜெயசீலன், ஐ.ராமு, ஜி.சுரேஷ்பாபு, பி.கமலசேகரன், ஆகியோர் வரவேற்கின்றனர்.

கழக மாணவர்அணி செயலாளர் சி.வி.எம். பி.எழிலரசன் எம்.எல்.ஏ, சிறப்புரையாற்றுகிறார். மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, நலஉதவிகள் வழங்குகிறார். டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, மாநில இளைஞரணி துணைச் செயலாளர் எஸ்.ஜோயல், கழக பேச்சாளர் ச.பரத், ஆகியோர் சிறப்பிக்கிறார்கள்.

தா.இளையஅருணா, டாக்டர் அ.சுபேர்கான், பி.டி.பாண்டிச்செல்வம், ந.மனோகரன், ஆர்.வெற்றிவீரன், மு.கோபி, எஸ். ஆர்.கமலக்கண்ணன், வி. தயாளன், க.நாகம்மை, வே.சிவக்குமார், ந.சண்முகம், கி.ராஜேந்திரன், லியோ.டி.சுரேஷ், எம்.தீனதயாளன், கஅர்த்திக்செங்குட்வன், லட்சுமிவேலு, கே.என்.பார்த்திபன், த. ஜெயபால், பி.சேகர், கு.சுந்தர், லோ.மோகன், பி.ஜெயலட்சுமி, எம்.கெ. இஸ்மாயில், கு.ரமேஷ், க.திருஞானம், வி.மலையம்மாள், இ.மதன், க. கலைசெல்வன், ஜி.சதிஷ்குமார், ஆர்.வி.கணேஷ், பி. கண்ணன், க.கோவிந்தராஜ், இரா.பாலன், எம். எல்.ரவி, எஸ்.புகழேந்தி, கொரியர்.பி.முருகன், பாலா லட்சுமணன், ஜெ.கௌரீஸ்வரன், மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

எம்.வினோத்குமார், என்.அப்துல்மாலிக், ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### வட்டச் செயலாளர் வி.ஆர்.குப்பன் ஏற்பாட்டில்

# மாதவரம் 23அ வட்டத்தில் துணை முதலமைச்சர் பிறந்தநாள் விழா! கண் சிகிச்சை முகாம்!

## புழல் எம். நாராயணன் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்!

சென்னை, டிச. 10-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி 23 அ வட்டக் கழகம் சார்பில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் கண் சிகிச்சை முகாம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

23 அ வட்டச் செயலாளர் வி.ஆர்.குப்பன் ஏற்பாட்டில் காவாங்கரை பிள்ளையார் கோயில் தெரு சமுதாய கூடத்தில் நடைபெற்ற இந்த பிறந்த நாள் நிகழ்ச்சியில், அப்பாசாமி கண் மருத்துவமனை சார்பில் மாபெரும் கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது.

நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு கிட்டப்பார்வை, தூரப்பார்வை, கண்ணில் நீர் வடிதல் குறித்த குறைபாடுகள் குறித்து தரமான மருத்துவர்கள் கொண்டு பரிசோதனை செய்து, குறைபாடு உள்ளவர்களுக்கு கண் கண்ணாடிகள் பரிந்துரை செய்யப்பட்டன. கண்களில் நீர் வழிபவர்களுக்கு மருந்து கண்களில் வழங்கப்பட்டது. கண் அறுவை சிகிச்சை செய்பவர்களுக்கு இலவசமாக கண் அறுவை சிகிச்சை செய்ய பரிந்துரை செய்யப்பட்டது.

பரிந்துரை செய்யப்பட்ட பொது மக்களுக்கு கண் கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் கலந்து கொண்டு முகாமை துவக்கி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

வட்டச் செயலாளர் வி.ஆர்.குப்பன் ஏற்பாட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட தாய்மார்களுக்கு சேலைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் வட்ட கழக நிர்வாகிகள் இ.இராமச்சந்திரன், பி.அறிவழகன், எம்.உசேன் மொய்தின், பார்பன், பி.முத்துக்கிருஷ்ணன், அப்துல் சமது, வி.ஹரி, பார்த்திபன், டி. லாரன்ஸ், பி.வாசுதேவன், பி.தனசேகர், வி .ஆர்.கே, ஜவகர், கே.ராஜேஷ், மகளிர் அணி எம்.அம்மமூர்த்தி, ஜெ.யுவராணி, எம்.அமுதா, எஸ்.கலைச்செல்வி, ஆர். சுதா, எம்.கலைச்செல்வி, ஜெயபாரதி, பிரியா, வயலட் ராணி, எம்.தேவி, ராஜேஸ்வரி, கே.ராஜேஸ்வரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள் .

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை வட்டச் செயலாளர் வி.ஆர்.குப்பன் செய்திருந்தார்.





மாதவரம் வடக்கு பகுதி 23 அ வட்டக் கழகத்தின் சார்பில் வட்டச் செயலாளர் வி .ஆர்.குப்பன் ஏற்பாட்டில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது. இம்முகாமில் இலவசமாக கண் கண்ணாடிகள மற்றும் நலத்திட்ட உதவிகளை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வழங்கினார். உடன் வட்டக் கழக நிர்வாகிகள் ராமச்சந்திரன், அறிவழகன், உசேன் மொய்தீன், பார்பன், முத்துகிருஷ்ணன், அப்துல் சமது,ஹரி, பார்த்திபன், லாரன்ஸ், வாசுதேவன், தனசேகர், ஜவகர், ராஜேஷ், அம்மு மூர்த்தி, யுவராணி, அமுதா, கலைச்செல்வி, சுதா, கலைச்செல்வி, ஜெயபாரதி, பிரியா, வயலட்ராணி, தேவி, ராஜேஸ்வரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### பி.டி.பாண்டிச்செல்வம் – கே.ரகுநாத் பங்கேற்பு! எஸ்.பாலமுருகன் ஏற்பாடு!

# மதுரவாயலில் உதய நாள் விழா – தெரு முனைக் கூட்டம்!

## ஆர்.ராஜீவ்காந்தி – காரம்பாக்கம் க.கணபதி, எம்.எல்.ஏ. சிறப்புரை!

சென்னை, டிச.10-

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி மு.வழக்கறிஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் எஸ்.பாலமுருகன், ஏற்பாட்டில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் உதய நாள் விழா தெரு முனைக் கூட்டம் இன்று 10.12.2024 செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணியளவில் காரம்பாக்கம், ராஜேஸ்வரி நகரில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மதுரவாயல் தெற்கு பகுதி கழக செயலாளர், மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, தலைமை கழக பேச்சாளர்கள் ஆர்.ராஜீவ்காந்தி, கோ.ரகுநாத், மதுரவாயல் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் பி.டி.பாண்டிசெல்வம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்கள். இந்நிகழ்ச்சியில் 150வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.ஹேமலதா கணபதி, எம்.சி. வட்டக் கழக செயலாளர் சி.சுந்தர் ஆகியோர் வரவேற்புரையாற்றுகிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதிகள் க. கைலாசம், இரா.ராஜேந்திரன், வட்ட நிர்வாகிகள் மு.ஆறுமுகம், எல்.அருள், ஆர்.எஸ்.தில்லைவாணன், ஆர்.லதா, இ.ஜெயவேல், இரா.ரமேஷ், இரா.சீனிவாசன், கே.ராமதாஸ், வி. ஜெகன்நாதன், ஜி. சீனிவாசன், மா.பா.சித்ராலயம், சி.எம்.தாமோதரன், ஜே.ஏ. துரை, நா.அப்துல்கபூர், அ. கவுஸ்பாஷா, ஏ.ராகேஷ், எம்.செல்வதுரை, எஸ்.சண்முகசுந்தரம் எஸ்.நித்தியானந்தம், க.நரேன்கணபதி, வெ.ஸ்டாலின், எஸ்.தனசேகரன், பி.பொன்மணிமாறன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் மதுரவாயல் வடக்கு பகுதி கழக செயலாளர், 11வது மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், எம்.சி., வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி, தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ்.அருணாச்சலம், தலைமை பொதுக்குழு உறுப்பினர் வ.செல்வகுமார், எம்.சி., மாவட்ட அமைப்பாளர்கள் வி. .ராஜேஷ், ஏ.விஜயபாலா, எஸ்.பி.அருள், இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் ச.சங்கர் கணேஷ்,எம்.சி., செ.ரவி, பகுதி கழக நிர்வாகிகள் பி. எம்.செல்வராஜ், வே.மதியழகன், இரா.பால்பாண்டியன், எஸ்.பாரதி, எம்.சி., கே.ராஜி, எம்.சி., வட்டக் கழக செயலாளர்கள் எஸ். ரமேஷ்ராஜ், த.ரமேஷ், அமோசஸ் , தி.சார்லஸ், ஆ. செல்வம், மாமன்ற உறுப்பினர்கள் செல்வி ரமேஷ், எம். சி., சாந்தி ராமலிங்கம், எம். சி., மதுரவாயல் தொகுதி வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் எஸ்.பகவதிராஜ், டி. ஆனந்தராஜ், பி.எஸ்.மதிசேகரன், கே.ராஜா, எஸ்.ஜி. வெங்கடேசன், ஜெ. ஜெரோம்ஜெயராஜ், கே.பாஸ்கரன், கே.சௌரிராஜன், டி.ஜான்சாமுவேல், பி.கே.சரத்குமார், எல். தினேஷ், கே. குமரன், கே. சீனிவாசன், ந.முத்தழகன், பி.ஹேமந்த்குமார், ஆர்.கணேசன், ஆர். ரோஹன், வி.பார்த்திபன், எஸ்.விஷ்ணு, எஸ்.ஜெயந்தி, இ.ஜானி, கே.அர்ஜீனன், எம்.பி.சீனிவாசன், எல். சுதன், பி.மார்க், வி.ஐயப்பன், பி.மகேஷ் , பி.கார்த்திக், கே.தட்சிணாமூர்த்தி, டி.பாலாஜி, எம்.சரத்குமார், பி.சுரேஷ், எம்.பி.மகேஷ் பாலு, எஸ்.மலர்ச்செல்வி, எஸ்.முருகானந்தம், ஆர். பி.பாலசுப்பிரமணியம், கே.எஸ்.தெய்வநாயகி, ஜி. அனுசுயா, எஸ். நிர்மல்குமார், என்.சின்னையா, எம்.பிரவின், டி.பிரவின், பி.தேவிபிரியங்கா, எஸ்.லட்சுமி, எம்.சரண்யா, எம். .திவ்யா,

மதுரவாயல் தெற்குப் பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கே.கந்தசாமி, எல். ஜனார்த்தனன், கே.முருகன், பி.ஞானம், தி.குமரவேல், இ.முனுசாமி, ஏ.தமிம்ஷா, வி.சுரேஷ், டி.லோகேஷ், ஏ.சுமன், ஜெ. வேல்பாண்டியன், சி.ராஜேஷ், ஆர். பிரேம்குமார், எல்.தானவேல், ஆர்.கோவிந்தசாமி, கே.விக்ரம், எம்.சரவணன், எம்.மகேஸ்வரி, ஏ.பிரேமா, என்.விவேக், ஏ.ஆனந்த், வி.மணிகண்டன், செயற்குழு உறுப்பினர்கள், பாக முகவர்கள் கி.ஜெயவேல், ஆ.பழனி, சு.நாகராஜன், கே.தமிழழகன், எஸ்.லட்சுமணன், ஆர்.ஜெயமுருகன், ஜி. .கோபிநாத், எஸ்.பிரகாஷ், சி.குப்புசாமி, எம்.கனிமொழி, ஆ.விஸ்வநாதன், ஏ.ராகுல்கணேஷ், எஸ்.குருசாமி, பி.ஹரி, கே.அன்பு, ஜி.வி.ராஜ்குமார், கே. ரேவதி மற்றும் வட்டக் கழக செயல்வீரர்கள், பாக நிலை உறுப்பினர்கள் (BLC) மற்றும் கழக முன்னோடிகள், கழகத் தோழர்கள், கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.

வழக்கறிஞர் அணி பகுதி அமைப்பாளர் ஆர்.சுரேஷ் பாபு நன்றியுரையாற்றுகிறார்.





சென்னை மேற்கு மாவட்டம், திருவல்லிக்கேணி பகுதி, 120அ வட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வட்டச்செயலாளர் என்.ரவி தலைமையில் நடந்த மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் 1000 பள்ளி மாணவ, மாணவிகளுக்கு புத்தகபை, எழுதுகோலினை மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு வழங்கி சிறப்புரையாற்றினார். இதில் பகுதி செயலாளர் ஏஆர்பி.எம்.காமராஜ், தலைமைக்கழக பேச்சாளர்கள் பொன்னேரி சிவா, சிவரஞ்சனி, மாவட்ட நிர்வாகிகள் வி.எஸ்.கலை, ஆ.சங்கீதா, மாமன்ற உறுப்பினர் மங்கை ராஜ்குமார், வி.பி.பொன்னரசு, பா. பிரகாஷ், இளம்பாரதி, எம்.கே. ஆனந்த், வட்டக்கழகச் செயலாளர்கள் ICF சங்கர், கே.ஜி.செந்தில்குமார், சசிகுமார், விஜயகுமார், லைனர் பிரபு மற்றும் கழக நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்துகொண்டு சிறப்பித்தனர்.